# சங்க இலக்கிய பெண்களின் தொழில் ஈடுபாடு

**ப. மணிகண்டன்**
மொழித்துறை, உதவிப்பேராசிரியர்
சி.எம்.எஸ். அறிவியல், வணிகவியல் கல்லூரி, கோவை

**மலர்:** 3
**இதழ்:** 3
**தொகுதி:** II
**மாதம்:** ஜனவரி
**வருடம்:** 2019
**ISSN:** 2454-3993

"வினையே ஆடவர்க்கு உயிரே" (குறு. 135:1) எனப் பொருளாதாரத்தைத் திரட்டும் கடமை ஆடவர்க்கு உரியதாகச் சிறப்பித்துக் கூறப்பட்டிருந்தாலும், நடைமுறை வாழ்வில் பெண்களும் தம் உடற்திறனுக்கும், நிலச் சூழலுக்கும் ஏற்றவகையில் தம்மால் இயன்ற தொழில்களைச் செய்து பொருளாதாரத் தேவையை நிறைவேற்றிக்கொண்ட செய்திகளைச் சங்க இலக்கியங்களில் காணமுடிகின்றது.

**தினைப்புனக் காவல்**

குறிஞ்சி நிலப் பெண்களான கொடிச்சியர் மலைப்புறத்தில் பயிர் செய்யப்பட்ட தினைப்புனத்தைக் காவல் செய்தனர். பருவம் அடைந்த பெண்களே இதில் ஈடுபட்டுள்ளனர். தினைப்புனத்தில் அமைக்கப்பட்டிருந்த பரண்மீது இருந்து தினைகளைத் தின்ன வரும் பறவைகளையும், விலங்குகளையும் கவண் வீசியும், தட்டை தட்டியும், தழலினைச் சுற்றியும், குளிரினைக் கொட்டியும் தினைப்புனக் காவல் செய்துள்ளதைச் சங்கப்பாடல்கள் குறிப்பிடுகின்றன.

**"தழலை வாங்கியும் தட்டை ஒப்பியும்**
**குறமகள் காக்கும் ஏனல்"**
**"படுகிளி கடியும் கொடிச்சி கைக்குளிரே"**
**"உண்கிளி கடியும் கொடிச்சி கைக்குளிரே"**

இப்பெண்கள் தினைப்புனக் காவலுக்கு அவர்களது பெற்றோரால் அனுப்பி வைக்கப்பட்டனர்.

**"...... வரையகச் சிறுதினை**
**செவ்வாய்த் தட்டையொடு அவணை ஆகென**
**ஏயள்மன் யாயும் நுந்தை வாழியர்**
**அம்மாமேனி நிரைதொடிக் குறுமகள்**
**செல்லாயோ"** **(நற். 134:3:8)**

இப்பணியைச் செய்தவர்கள் பெண்களாகவே காட்டப்பட்டுள்ளனர் என்பதும் தெரியவருகின்றது. வேளாண்மையால் பெற்ற விளைச்சலை அறுவடைக் காலம் வரை காப்பாற்றும் இன்றியமையாப் பொறுப்பு, பெண்களுக்கு இருந்துள்ளதை இது உணர்த்துகின்றது.

**பால்படு பொருள்கள் விற்பனை**

முல்லை நில மக்களின் இன்றியமையா முதன்மைத் தொழிலாக ஆடு, மாடு, எருமை போன்ற கால்நடை மேய்த்தல் இருந்துள்ளது. இம்மக்களில் ஆடவர் (ஆயர், இடையர்) தாம் வளர்க்கும் கால்நடைகளை மேய்க்கும் தொழிலையும், பெண்கள் (ஆய்ச்சியர், இடைச்சியர்) அவற்றைப் பராமரித்துப்

பலன்பெறும் தொழிலையும் மேற்கொண்டனர். கால்நடைகளால் கிடைக்கப்பெற்ற பாலைக்கொண்டு தயிர், மோர், வெண்ணெய், நெய் ஆகியவற்றை உற்பத்தி செய்து அவற்றைப் பண்டமாற்றாக விற்பனை செய்யும் தொழிலை ஆய்ச்சியர் மேற்கொண்டதைச் சங்கப் பாடல்களால் அறிய முடிகின்றது. ஆய்மகள் மருத நிலப்பகுதியில் தயிரை விற்று அதற்கு ஈடாகப் பண்டமாற்றில் நெல்லைப் பெற்றுக்கொண்டாள் என்று பின்வரும் பாடல் கூறுகின்றது.

**"ஆய்மகள், தயிர் கொடு வந்த தசும்பு நிறைய**
**ஏரிய வாழ்நர் பேரில் அரிவையர்**
**குளக்கீழ் விளைந்த களக்கொள் வெண்ணெல்**
**முகந்தனர் கொடுப்ப உவந்தனர் பெயரும்" (புறம் 33:2-6)**

ஆய்ச்சியர் ஆநிரைகளைக் காத்து, அதனால் பெற்ற பாலைத் தயிராக்கி அதைக் கடைந்து மோராக மாற்றி வெண்ணெய் எடுத்து அதை நெய்யாக உருக்கியதையும், குறிஞ்சி நிலப்பகுதியில் மோரை விற்று அதற்கு நெல்லைப் பெற்றுக் கொண்டதையும், நெய்யை விற்று அதற்குப் பொன்னைப் பெறாமல் மேலும் கால்நடைகளை வாங்கிக்கொண்டமையும் பெரும்பாணாற்றுப்படையில் (155-165) பதிவு செய்யப்பட்டுள்ளது. பாலின் பயனைத் தக்கவாறு ஆயமகளிர் விலைப்படுத்தும் தொழிலைக்கொண்டதால் அவர்கள் பொருளாதாரத் தன்னிறைவுடன் வாழ்க்கை நடத்தி வந்துள்ளனர்.

**உழவுத் தொழில்**

மருதநிலப்பகுதியில் வாழ்ந்த பெண்கள் உழவுத் தொழிலை மேற்கொண்டனர். இவர்களை உழத்தியர், கடைச்சியர் என்றும் இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. பெரும்பாணாற்றுப்படை, மதுரைக்காஞ்சி, மலைபடுகடாம் ஆகிய நூல்கள் மருதநிலப் பெண்கள் உழவுத் தொழிலில் மேற்கொண்ட பணிகளை விவரிக்கின்றன.1 உழத்தியர் வயலில் நெல் நடும் முன்பாகக் கால்களால் சேற்றைமிதித்துப் பின்பு அதில் நெல்நாற்றுகளை நடுவதும், களை பறிப்பதும், அறுவடை செய்து தலையில் சுமந்து களத்தில் சேர்ப்பதும், அடித்த நெல்லைத் தூற்றுவதும் பெரும்பாணாற்றுப்படையில் அழகுறக் காட்டப்பட்டுள்ளன. இதில் உழத்தியரின் வினைத்திறம் சிறப்புற வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

கொண்டை முடித்துத் தழையுடை அணிந்த கடைச்சியர் நெல் வயலில் களைகளாக முளைத்த நெய்தல், ஆம்பால் போன்றவற்றைக் களைந்த காட்சியைப் புறநானூறு,

**"கொண்டைக் கூடழைத் தண்கழைக் கடைசியர்**
**சிறுமாண் நெய்தல் ஆம்பலொரு கட்கும்**
**மலங்கு மிளிர் செறு" (புறம். 61:1-3)**

என்று குறிப்பிடுகின்றது. நெல்லறுக்கும் உழவர் மகளிர் வயலில் உண்ண வரும் நாரைக் கூட்டத்தை ஒப்புதலையும், ஆம்பலோடும், நெற்தற் பூவோடும் நெல்லை அறுத்து வரும் செய்தியைப் பின்வரும் பாடலடிகள் குறிப்பிடுகின்றன.

**".... அகன்கண் செறுவின்**
**அருவி ஆம்பல் நெய்தலொடு அறிந்து**
**செறுவினை மகளிர்....**
**பரூஉப் பகடு உதிர்ந்த மென்செந்நெல்" (பதி -71:1-4)**

**மீன் சார் தொழில்கள்**

நெய்தல் நிலப் பெண்ணான பாண்மகள் ஒருத்தி நீர் நிலையின் கரையில் அமர்ந்து தூண்டில் இணைக்கப்பெற்ற கயிற்றைக் கட்டிய கோலைக்கொண்டு வரால் மீனைப் பிடித்த செய்தி, அகநானூ ற்றில் பின்வருமாறு இடம்பெற்றுள்ளது.

**"நாண்கொள் நுண்கோலின் மீன்கொள் பாண்மகள்**
**தண்புனல் அடைகரைப் படுத்த வராஅல்" (அகம் 216:1-2)**

இச்செய்தி பெண்களும் மீன்பிடித் தொழிலைச் செய்துள்ளனர் என்பதையும், அதற்காக ஆண்களைப்போல் வலையைப் பயன்படுத்தாமல் தூண்டிலைப் பயன்படுத்தியுள்ளனர் என்பதையும் அறியமுடிகின்றது.

பாண்மகள் தனது தந்தையும், தனையனும், பிடித்துவந்த வாளை, வரால், கெடிறு போன்ற மீன்களை விற்று அவற்றிற்கு மாற்றாக முத்து அணிகலன்கள், செந்நெய், வெண்ணெய், பயறு ஆகியவற்றைப் பண்டமாற்றாகப் பெற்றதனை,

**"... தன்னையர் காலைத் தந்த ... வாளைக்கு... பாண்மகள்**
**.... கழங்கு உறழ் முத்தமொடு நன்கலம் கொள்வாள்"**
**"வலைவல் பாண்மகள் வாலெயிற்று மடமகள்**
**வராவல் சொரிந்த வட்டியுள் மனையோள்**
**யாண்டுகழி வெண்ணெல் நிறைக்கும்"**
**"பாண்மகள் சிறுமீன் சொறிந்து பன்னெல் பெறூஉம்"**
**"பாண்மகள் இன்கெடிறு சொரிந்த**
**அகன்பெறு வட்டி நிறைய மனையோள்**
**அரீகாற் பெரும்பயறு நிறைக்கும்"**

ஆகிய பாடலடிகள் புலப்படுத்துகின்றன. தனையன்மார் பிடித்து வந்த பெரிய சுறாமீனைக் கூறுபோட்டு வீதிகளில் விற்பனை செய்தனர்.

பரதவர்கள் கடலிலிருந்து பிடித்து வந்த மீன்களுள் விற்றதுபோக எஞ்சியவற்றைத் துண்டங்களாக்கி உப்பிட்டு வெண்மணலில் பரப்பி வெயிலில் உலர்த்தி, அவற்றைப் பறவைகள் தின்னாதவாறு காவல் காத்து, உலர்ந்த கருவாடுகளைச் சேகரித்துப் பதப்படுத்தவும், அவற்றை விற்பதும் பரதவமகளிரின் தொழிலாக இருந்துள்ளது.

**உப்பு விற்றல்**

உப்பு விற்கும் தொழிலில் ஈடுபட்ட பெண்களை உமட்டியர் என்று சங்க இலக்கியம் கூறுகின்றது. உமணப் பெண் உப்பிற்க நேர் நிறையாக நெல்லை விலை கூறுவதை,

**"உமணர் காதல் மடமகள்**
**நெல்லின் நேரே வெண்கல் உப்பெனச்**
**சேரிவிலைமாறு கூறலின்"** **(அகம். 140:1-3)**
**"நெல்லும் உப்பும் நேரே ஊரீர்**
**கொள்ளீரோ எனச் சேரிதொறும் நுவலும்**
**அவ்வாங்கு உந்தி அமைத்தோள்"** **(மேலது 390:8-10)**

ஆகிய பாடலடிகள் கூறுகின்றன. உமணப் பெண்கள் சேரிகளிலும், ஊர்களிலும் சென்று உப்பினைக் கூவிக்கூவி விற்றுள்ளனர் என்பது புலனாகின்றது. மேலும், இப்பெண்களே உப்பினை ஏற்றிச் சென்ற மாட்டு வண்டிகளை ஓட்டிச் சென்றுள்ளதைச் சிறுபாணாற்றுப்படை (55-62) கூறுகின்றது.

**கள் விற்றல்**

கள் விற்கும் தொழிலில் ஈடுபட்ட பெண்களை "அறியற் பெண்டிர்", "அரியலாட்டியர்", "கள் அடு மகளிர்" ஆகிய பெயர்களில் சங்கப் பாடல்கள் குறிப்பிடுகின்றன. இப்பெண்கள் கள்ளினைக் காய்ச்சிய செய்தியைப் பெரும்பாணாற்றுப்படை, "கள்ளடு மகளிர் வள்ளம் நுடக்கிய வார்ந்துகு சின்னீர்" (339-340) என்று கூறுகின்றது. அகநானூற்றில் இடம்பெற்றுள்ள

**"அரியலாட்டியர் அகல்மனை வரைப்பின்**
**மகிழ்நெடை பெறாஅ ராகி"** **(அகம்.145:9-10)**

என்ற குறிப்பினால், கள்விற்கும் பெண்கள் தங்களது இல்லங்களிலேயே கள்ளைக் காய்ச்சி விற்றுள்ளனர் என்பதும், அதற்கு மாற்றாக யானைத் தந்தத்தைப் பெற்றனர் என்பதும் புலனாகின்றது. மேலும் ஒரு பாடலில்,

**"அரியற் பெண்டிர் அல்குல் கொண்ட**
**பகுவாய்ப் பானைக் குவிமுனை சுரந்த**
**அரிநிறக் கலுழி ஆரமாந்திச்**
**செருவேட்டுச் சிலைக்கும் செங்கண் ஆடவர்" (மேலது, 157:1-4)**

என்று குறிப்பிடப்பட்டுள்ளதால் இப்பெண்கள் வெளியிடங்களுக்குச் சென்றும் கள் விற்பனை செய்துள்ளது தெரியவருகின்றது. "கள்" என்பது சங்க இலக்கியங்களில் களிப்பு தரும் ஆகாரமாகவே பார்க்கப்பட்டுள்ளதால், அதை விற்ற மகளிரை எவ்விடத்திலும் இழிவாகப் பேசவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

**பூ விற்பனை**

அந்நந்தப் பருவத்தில் மலரும் புத்தம்புது மலர்களைச் கொய்து இளம்பெண்கள் வட்டிகளில் ஏந்தித் தெருக்கள்தோறும் திரிந்து விலைகூறி விற்றதை நற்றிணை, அகநானூறு, புறநானூறு, மதுரைக்காஞ்சி ஆகிய இலக்கியங்கள் கூறுகின்றன. உழவரின் இளமகள் ஒருத்தி மழைக்காலத்தில் மலரும் குருக்கத்தி மலருடன், சிறு சண்பக மலரையும் கடகப் பெட்டியில் வைத்துக் கையில் எடுத்துக்கொண்டு, ஷவிலைக்குக் கொள்ளீரோ' எனக் கூவிச் சென்ற செய்தியினைப் பின்வரும் நற்றிணைப் பாடல் காட்டுகின்றது.

**"... பைங்குருக்கத்தியொடுஷ**
**பித்திகை விரவுமலர் கொள்ளீரோவென**
**வண்டுசூழ் வட்டியல் திரிதரும்**
**தண்டலை உழவர் தனிமட மகளே" (நற்-97:6-9)**

இருப்பைப் பூக்களை எயினப் பெண்கள் மூங்கிற்குழாயில் வைத்து எடுத்துச் சென்று, குன்றுகளுக்கிடைப்பட்ட சிறிய குடியிருப்பின் தெருக்களில் விலைகூறி விற்றுள்ளனர். வயது முதிர்ந்த பெண்களும் மணமிக்க மலர்களை ஏந்திச்சென்று இல்லந்தோறும் விற்றதை மதுரைக் காஞ்சி,

**".... தொன்முது பெண்டிர்**
**கமழ்நறும் பூவொடு மனைமனை மறுக" (மதுரை - 423)**

என்று குறிப்பிடுகின்றது. பூவிற்கும் பெண்கள் சூழ்நிலை அறிந்து இல்லங்களுக்குச் சென்று மலர் விற்பவர் என்னும் கருத்தைப் புறநானூறு,

**"குறும்பர்க்கு எறியும் ஏவல் தண்ணுமை**
**நூலுடை மாக்கட்கு இரங்கு மாயின்**
**எம்மினும் பேரெழில் இழந்து வினையெனப்**
**பிறர்மனை புகுவள் கொல்லோ**
**அறியள் தானே பூவிலைப் பெண்டே" (புறம்-293:2-6)**

எனக் கூறுகின்றது. வீரர்களைப் போருக்கு அழைக்கும் தண்ணுமை ஒலிகேட்ட பூவிலைப் பெண்டு, போர் தொடங்கிவிட்டது. இனி ஆடவர் மனைக்கண் தங்கமாட்டார். ஆதலால் வீரர்களின் மனைமகளிர் தன்னிடம் பூக்களை வாங்கமாட்டார்' எனக் கருதிப் பார்ப்பனர், மகப்பெறாதார் போன்றோர் வாழும் மனைகளுக்குச் சென்று பூவினை விற்பாள். இதனால் அவளது மலர் விற்பனையின் அளவு குறைவுபடக் கூடுமாகையால் அவள் ஷஅளியள்' (இரங்கத்தக்கவர்) எனக் கூறப்படுகின்றாள்.

**நெசவுத் தொழில்**

பண்டைத் தமிழ் மக்களின் ஆடைத் தொழில்நுட்பம் சிறப்புற்றிருந்தது. நெசவுத் தொழிலுக்கு இன்றியமையாத் தேவையான பருத்தியைப் பயிர் செய்து விளைவித்து, வில்லால் அடித்துக் கொட்டையும் கோலும் நீக்கித் தூய்மை செய்து பயன்படுத்தினர். பெண்கள் நெசவில் ஆண்களுக்குப் பெரிதும் உதவி செய்தனர். இத்தொழிலில் ஈடுபட்ட பெண்களைப் ஷபருத்திப் பெண்டிர்’ என்று பாடல்கள் குறிப்பிடுகின்றன. இப்பெண்கள் இரவு பகலாக நெசவுத் தொழிலில் ஈடுபட்டனர் என்பதைப் புறநானூற்றுப் பாடலின்,

**“பருத்திப் பெண்டின் சிறுதீ விளக்கத்து”** **(புறம்-326:5)**

என்னும் குறிப்பினால் அறியமுடிகின்றது. பஞ்சினை நூலாக்கும் தொழில் பொதுவாகப் பெண்களுக்குரியதாக - குறிப்பாகக் கணவரை இழந்த பெண்களுக்குரியதாக இருந்துள்ளது. நூல்நூற்றல் என்பது ஓய்வாகவும், பொறுமையாகவும், மன ஒருமைப்பாட்டுடனும் செய்ய வேண்டிய செயல் என்பதனால் பெண்கள் அதனை மேற்கொண்டு வந்துள்ளனர். கைம்பெண்களே இத்தொழிலில் பெரிதும் ஈடுபட்டுள்ளதை ஷஆணிற் பெண்டிற் தாளிற் நெய்த நுணங்கு நுண்பனுவல்” என்னும் நற்றிணைக் குறிப்பால் (353:1-2) அறிய முடிகின்றது. ஷஆணிற் பெண்டிர்’ என்னும் தொடர் பொருள் தேடிவந்து பாதுகாக்கும் கணவனை இழந்த கைம்மைப் பெண்களைக் குறிக்கின்றது. இது பிறரை எதிர்பாராமல் தாமே முயன்று தொழில் செய்து வாழ்வதற்கு உதவும்வகையில் செயல்பட்ட பெண்களின் தன்னம்பிக்கையினைப் புலப்படுத்துகின்றது.

**ஆடை வெளுத்தல்**

சங்ககாலச் சமுதாயத்தில் ஆடைவெளுக்கும் தொழிலில் ஈடுபட்ட பெண்கள் ஷபுலத்தி’ என்று அழைக்கப்பட்டனர். ஆடை வெளுப்பது ஒரு தொழிலாக அமைந்தாலும், அது பெரிய சேவையாகவே கருதப்பட்டது. இப்பெண்கள் ஆடைகளை வெளுப்பதற்காகக் களர் மண்ணில் கூவலைத் தோண்டி உவர்மண் எடுத்துப் பயன்படுத்தியதையும், ஊராரின் துணிகளை வாங்கிச் சென்று துவைத்துக்கொண்டு வந்துக் கொடுத்ததையும்,

**“களர்ப்படு கூவல் தோண்டி நாளும்**
**புலைத்தி கழீஇய காவெள் அறுவை”** **(புறம் 311:1-2)**
**“ஊரவர் ஆடை கொண்டு ஒலிக்குநின் புலைத்தி” (கலி. 72:14)**

ஆகிய குறிப்புகள் உணர்த்துகின்றன. இவர்கள் மேற்கொண்ட பணிக்காகப் பணம், நெல், உணவு ஆகியவற்றைப் பெற்றனர். ஆடைகளில் அழுக்கை ஆராய்ந்து துவைப்பதில் பெரிதும் தன்னம்பிக்கை ஒழியாத பண்புடையவள் என்றும், இவள் பூத்தொழிலில் அமைந்த ஆடையை இரவு நேரத்தில் தேய்த்துக் கஞ்சியிட்டுப் புலர்த்துவாள் என்றும் நற்றிணை, குறுந்தொகை ஆகிய நூல்களில் இடம்பெறும் பின்வரும் குறிப்புகள் தெரிவிக்கின்றன.

**“உடையோர் பான்மையிற் பெருங்கை தூவா**
**அறனில் புலைத்தி”** **(நற்.90:2-3)**
**“நலத்ததைப் புலைத்தி பசை தோய்த் தெடுத்துந்**
**தலைப்புடை போக்கித் தண்கயத்திட்ட**
**நீரின் திரியாப் பரூ உத்திரி”** **(குறு330:1-3)**

இரவில் தோய்த்து உலர்த்துவதால் ஆடையின் நிறம் மாறாமல் இருக்கும் என்னும் தொழில்நுட்பத்தினை அறிந்தவராய் இவர்கள் திகழ்ந்ததை இதன்மூலம் அறியமுடிகின்றது. மேலும்,

**“பசைசொல் மெல்விரல் பெருந்தோட் புலைத்தி” (அகம்.34:11-12)**
**“பசைவிரல் புலைத்தி நெடிது பிசைந்தூட்டிய பூந்துகில்” (மேலது,387:6-7)**

ஆகிய குறிப்புகளால், ஆடைகளுக்குக் கஞ்சியிட்டு வெளுக்கும் தொழில்நுட்பத்தை இவர்கள் கடைபிடித்து வந்துள்ளதையும் அறிய முடிகின்றது.

**ஏவல் மகளிர்**

பெண்களுள் சிலர் ஏவற்பெண்டிராக இருந்து பிறர்க்குப் பணிசெய்து வந்தமையினைச் சங்க இலக்கியங்கள் காட்டுகின்றன. இவர்கள் அரண்மனைகளிலும், செல்வந்தர் வீடுகளிலும், அங்கேயே இருந்து பணியாற்றியவர்கள் என்பது பாடல்களில் கிடைக்கப்பெறும் குறிப்புகளால் உணர்த்தப்படுகின்றது. ஏவல் பெண்டிர் அரசனைக் காணவரும் விருந்தினரை அரசன் கருதியபடி உபசரிக்கும் பணியைச் செய்துள்ளனர். இவர்கள் தங்களை அணிகலன்களால் அழகுப்படுத்திக் கொண்டிருந்தனர். விருந்தினர்களை உபசரிக்கும்பொருட்டு அவர்களுக்குத் தேவையான பல்வேறு பணிவிடைகளையும் இன்முகத்துடன் செய்யக்கூடியவர்களாகக் காணப்படுகின்றனர் இவர்கள் அரசர்களுக்கும், வருகின்ற விருந்தினர்க்கும், இரவலர்க்கும் மதுவினைப் பொற்கலங்களில் ஊற்றிப் பரிமாறியுள்ளனர். பாண்டியன் இலவந்திகைப் பள்ளித் துஞ்சிய நன்மாறனும், பாண்டியன் தலையானங் கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனும் யவனர் தந்த தேறலை ஏவல் மகளிர் பொற்காலத்தில் ஊட்ட மகிழ்ந்திருந்ததாகப் பின்வரும் இலக்கியச் சான்றுகள் கூறுகின்றன.

**"யவனர் நன்கலம் தந்த தன்கமழ் தேறல்**
**பொன்செய் புனைகலத்து ஏந்தி நாளும்**
**ஒண்தொடி மகளிர் மடுப்ப மகிழ் சிறந்து"** (புறம் 56:18-20)
**"ஒண்தொடி மகளிர் பொலங்கலத்து ஏந்திய**
**கண்கமழ் தேறல் மடுப்ப மகிழ் சிறந்து"**
**போக்கில் பொலங்கல நிறையப் பல்கால்**
**வாக்குபு தரத்தர வருத்தம் வீட"** ( பொரு 85-87)

இவற்றால், அரண்மனை, செல்வந்தர் மனை ஆகியவற்றில் அவர்களின் ஏவலைக் கேட்டு அதன்படி அவர்களை மகிழ்விக்கும் பணியினைப் பெண்கள் மேற்கொண்டு வந்துள்ளதை அறியமுடிகின்றது.

**பாசறைப் பெண்கள்**

போர் பாசறையிலும் பெண்கள் பணிசெய்தனர். முல்லைப் பாட்டின் பின்வரும் பாடலடிகள் இப்பாசறைப் பெண்கள் குறித்து விரிவாகப் பேசுகின்றது.

**"இரவுபகல் செய்யும் திண்பிடி ஒள்வாள்**
**விரவுவரிக் கச்சிற் பூண்ட மங்கையர்**
**நெய்யுமிழ் சுரையர் நெடுந்தரிக் கொளீ இக்**
**கையமை விளக்க நந்துதொறு மாட்ட"**

என்னும் பாடலடிகள், "போர்ப் பாசறையில் இருக்கும் போர்த் தலைவர்களுக்குப் பணிப் பெண்களாகவும், பாசறையில் விளக்கேற்றுபவர்களாகவும், காவல் காப்பவராகவும் பெண்கள் இருந்துள்ளனர்" என்பதை அறிய உதவுகின்றன. இப்பெண்கள், உறுதியான பிடியை உடை ஒளிரக்கூடிய வெறும் பணிவிடை மகளிர் அல்ல என்பது புலப்படுகின்றது. பெரிய வாளைக் கையாளும்திறம், போர்ப்பயிற்சி பெற்றவர்களாலேயே இயலும் என்பதால், இப்பெண்கள் வாள்வீசும் திறம்கொண்ட வீரமங்கையராகவே இருந்திருக்க வேண்டும் என்பது புலனாகின்றது.